சுதந்திர தினம்: வ.உ.சி. மைதானத்தில் தேசியக் கொடியேற்றினார் ஆட்சியர்

கோவை, வஉசி மைதானத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ற மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர். (வலது) கோவை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்திய மேயர் கா.ரங்கநாயகி. உடன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் உள்ளிட்டோர்.

கோவை, ஆக. 15: சுதந்திர தினத்தையொட்டி, கோவை, வ.உ.சி. மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வெள்ளிக்கிழமை தேசியக் கொடியை ஏற்றிவைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

பின்னர், மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அழகிரி, கூட்டுறவுத் துறை சார் பதிவாளர்கள் நித்யா கார்த்திக் ராஜ், கிறிஸ்டோபர், சத்யா, வேல் முருகன், அரவிந்த் ஆகியோருக்கு ஆட்சியர் கேடயங்களை வழங்கினார்.

தொடர்ந்து, வருவாய்த் துறை, பல்வேறு துறைகளின் சார்பில் சிறப்பாகச் செயல்பட்ட 30 அலுவலர்கள் மற்றும் 155 பணியாளர்கள், மாநகரக் காவல் துறையில் சிறப்பாக பணிபுரிந்த 54 காவலர்கள், ஊரகப் பகுதியில் சிறப்பாக பணிபுரிந்த 87 காவலர்கள் என மொத்தம் 326 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

பின்னர், இந்தியா-பாகிஸ்தான் எல்லையான வாகாவில் நடைபெறுவது போன்ற அணிவகுப்பு மாநகர காவல் துறையின் ஆயுதப் படையினரால் நடத்தப்பட்டது. இதையடுத்து, பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாநகரக் காவல் ஆணையர் ஆ.சரவணசுந்தர், காவல் கண்காணிப்பாளர் கே.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுருபிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் மோ.ஷர்மிளா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே, இணை ஆணையர் (வணிக வரித் துறை) சுபம் தாக்ரே ஞானதேவ் ராவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாநகராட்சி அலுவலகத்தில்: கோவை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மேயர் கா.ரங்கநாயகி தேசியக் கொடியை ஏற்றினார். முன்னதாக, மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில், மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, கோவை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய 10 தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என 127 பேருக்கு பாராட்டுச் சான்றிதழை மேயர் வழங்கினார்.

மாநகராட்சி பள்ளிகளில் 2024-25-ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத் தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள், பயிற்சி அளித்த ஆசிரியர்கள் என மொத்தம் 501 பேருக்கும், 100 சதவீத தேர்ச்சி பெற்ற ஆர்.எஸ்.புரம் மேற்கு மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒக்கிலியர் காலனி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, புலியகுளம் மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள், கேடயங்களை மேயர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாநகராட்சி துணை ஆணையர்கள் த.கும்மரேசன், அ.சுல்தானா, மாநகர தலைமைப் பொறியாளர் விஜயகுமார். மண்டல குழுத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி, பணிகள் குழுத் தலைவர் சாந்திமுருகன், நிதிக் குழுத் தலைவர் வி.ப.முபசீரா, நகரமைப்பு குழுத் தலைவர் சோமு (எ) சந்தோஷ், தீபா தள பதி இளங்கோ (கணக்குகள்), நகரமைப்பு அலுவலர் ராஜசேகர், மாநகர துணை தலைமை பொறியாளர் இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில்: கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், வங்கியின் கூடுதல் பதிவாளர் சு.ராம கிருஷ்ணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, கடன் திட்டங்களின்கீழ் அதிக கடன் வழங்கிய கிளைகளுக்கும், அதிக வைப்புகள் சேகரித்த கிளைகளுக்கும், சிறப்பாக பணியாற்றி பணியாளர்களுக்கும் பரிசு, சான்றிதழ்களை வழங்கினார்.

பஞ்சாலை தொழிலாளர் சங்கம்: கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், சிங்காநல்லூர் சங்க தலைமை யகம் முன் சங்கத்தின் தலைவர் ராஜாமணி தேசியக் கொடியை ஏற்றினார். ஹெச்எம்எஸ் மாநில அமைப்புச் செயலர் மனோகரன் முன்னிலை வகித்தார். சங்க துணைத் தலைவர்கள் சண்முகம், கே.பழனிசாமி, செயலர்கள் தேவராஜன், மோகன்ராஜ், ஹெச் எம்எஸ் பொதுத் தொழிலாளர் சங்க செயல் தலைவர் பழனிசாமி, பொருளாளர் எம்.பழனிசாமி,நிர்வாகிகள் சண்முகம், முருகேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாரத மாதா நற்பணி அறக்கட்டளை: கோவை, செளரிபாளையம் பாரத மாதா நற்பணி அறக்கட்டளையின் சார்பில் உடையாம்பாளையம் பகுதியில் சுதந்திர தின விழா நடைபெற்றது. அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கௌரி சங்கர் தலைமை வகித்தார். தூய்மைப் பணியாளர் பிரதிமா, வழக்குரைஞர் சுபாசினி ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். சமூக சேவகர் சண்முகம் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

இதில், சிலம்ப ஆசிரியர் ஆனந்தன், லட்சிய துளி நிர்வாகிகள் தினேஷ்குமார், நாகராஜ், பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரூர் தமிழ் மன்றம்: பேரூர் தமிழ் மன்றம் மற்றும் சப்னா புக் ஹவுஸ் இணைந்து நடத்திய சுதந்திர தின விழாவுக்கு கே.கதிரவன் தலைமை வகித்தார். விழாவில், தேசியக் கொடி ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

பெ.நா.பாளையம் காவல் நிலையத்தில்...

பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றிவைத்த உதவி ஆய்வாளர் செந்தில்குமார்.

துடியலூரில்...

சுதந்திர தினத்தையொட்டி, துடியலூரில் உள்ள கவுண்டம்பாளையம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை தேசியக் கொடி ஏற்றிய பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்.எல்.ஏ.

ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தில்...

ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வி நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், சிறந்த அணிவகுப்பு அணிக்கான கோப்பையை மாணவர்களுக்கு வழங்கிய வித்யாலய கல்வி நிறுவனங்களின் செயலர் சுவாமி கரிஷ்டானந்தர்.

பெ.நா.பாளையம், ஆக.15: பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வி நிறுவனங்கள் சார்பில் மாருதி உடற்கல்வி மைதானத்தில் சுதந்திர தின விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதில், வித்யாலய கல்வி நிறுவனங்களின் செயலர் சுவாமி கரிஷ்டானந்தர் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, தேசியக் கொடியை ஏற்றிவைத்து பேசினார்.

முன்னதாக, ராமகிருஷ்ணா கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், தேசிய மாணவர் படையினர், மாணவ செஞ்சிலுவை சங்கத்தினர் வண்ணச் சீருடைகளில் மைதானத்தில் அணிவகுத்து வந்தனர்.

அணிவகுப்பில் பங்கேற்ற ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, மாருதி உடற்கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு சுவாமி கரிஷ்டானந்தர் கோப்பைகளை வழங்கினார்.

விழாவில் சாதுக்கள், பிரம்மச்சாரிகள், பள்ளி தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், பல்வேறு நிறுவனங்களின் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம்

நாயக்கன்பாளையம் ஊராட்சி ராயரூத்துபதி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்றோர்.

பெ.நா.பாளையம், ஆக.15: பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சிஒன்றியத்தில்உள்ள பிளிச்சி, நாயக்கன்பாளையம், அசோகபுரம், குருடம்பாளையம், பன்னிமடை, நஞ்சுண்டாபுரம், சின்னத்தடாகம், 24.வீரபாண்டி, சோமையம்பாளையம் ஊராட்சிகளில் அந்தந்த ஊராட்சி செயலாளர்கள் முன்னிலையில் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

நாயக்கன்பாளையம் ஊராட்சிக்குள்பட்ட பழங்குடியின கிராமமான ராயரூத்துபதியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்துக்கு பற்றாளர் நந்தகோபால் முன்னிலை வகித்தார். நாயக்கன்பாளையம் ஊராட்சியின் முன்னாள் துணைத் தலைவர்கள் சின்னராஜ், மகேந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு, குடிநீர்ப் பற்றாக் குறை குறித்தும், சமுதாய நலக்கூடம் கட்ட வேண்டும் என்றும், பழங்குடியினருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து,ஊராட்சியில் கல்வி கற்காதோர் இல்லை என்ற நிலையை உருவாக்கவும், முழு எழுத்தறிவு பெற்ற ஊராட்சியாக மாற்ற வேண்டும் என்றும் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில், அவினாசிலிங்கம் பல்கலைக்கழக மாணவ,மாணவிகள் பங்கேற்று கிராம சபைக் கூட்டத்தின் செயல்பாடுகள் குறித்து அறிந்துகொண்டனர்.

பெ.நா.பாளையம் பேரூராட்சியில்...

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்த பேரூராட்சித் தலைவர் வெ.விஷ்வபிரகாஷ்.

பெண் சிசு உடல் மீட்பு: 3 பேர் கைது

மேட்டுப்பாளையம், ஆக. 15: மேட்டுப்பாளையத்தில் பெண் சிசு உடல் மீட்கப்பட்ட வழக்கில் இரண்டு பெண்கள் உள்பட 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த 22 வயது கல்லூரி மாணவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த 19 வயது கல்லூரி மாணவிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அப்பெண் கர்ப்பமடைந்த நிலையில், குறை பிரசவத்தில் கடந்த 9-ஆம் தேதி பெண் குழந்தை பிறந்துள்ளது.

அப்போது, அந்தக் குழந்தை எந்தவித அசையும் இன்றி இருந்ததால், குழந்தை இறந்துவிட்டதாக எண்ணி அப்பெண்ணும், அவரது தாயும் சேர்ந்து வீட்டுக்கு அருகேயுள்ள புதரில் வீசியுள்ளனர்.

இந்நிலையில், அப்பகுதியில் துர்நாற்றம் வீசியதால், பொது மக்கள் சென்று பார்த்தபோது குழந்தை உடல் அழுகி கிடந்துள்ளது.

இது குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டபோது, இளம்பெண்ணும், அவரது தாயும் சேர்ந்து குழந்தையை புதரில் வீசியது தெரியவந்தது.

இதையடுத்து, இளம்பெண், அவரது காதலர், இளம்பெண்ணின் தாய் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார், 3 பேரையும் கைது செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பெயர் மாற்றம்

நான், **சுப்பிரமணி** த/பெ திரு. கருப்புசாமி, பிறந்த தேதி : 14.05.1963, (பிறந்த மாவட்டம்: திருப்பூர்) (ஆதார் எண்.7041 5216 2262) எண்.104/10, விங்கப்பா கவுண்டர் தோட்டம், திருப்பூர் தெற்கு, மணியகாரம்பாளையம், திருப்பூர் தமிழ்த் தோட்டத்தில் வசிக்கிறேன். இனிமேல் **சுப்பிரமணியம்** என்று அழைக்கப்படுவேன்.

சுப்பிரமணி

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண். 15/9A, வள்ளுவர் தெரு, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone : 0422-2491504, 2491505
website: www.acmills.in, email: ambika@acmills.in

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

அன்புள்ள பங்குதாரர்களே,

பொருள்: 'சாக்ஷம் நிவேஷக்' பிரச்சாரத்தின் தொடக்கம் - நிறுவன பங்குதாரர்கள் செலுத்தப்படாத / கோரப்படாத ஈவுத்தொகைகளை கோருதல் மற்றும் KYC கோப்புகளை திருத்துதல் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய விவரம்.

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (IEPFA), கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA), 16 ஜூலை 2025 என தேதியிட்ட கடிதத்தின் தேவைப்படி , அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 'சாக்ஷம் நிவேஷக்' என்ற தலைப்பில் 28 ஜூலை 2025-ல் இருந்து 6 நவம்பர் 2025 வரையிலான காலத்தில் அதாவது 100 நாள் சிறப்பு பங்குதாரர் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்குவதை தெரிவிக்கிறது.

இந்த காலகட்டத்தில் நிறுவன பங்குதாரர்கள் 'உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்' அதாவது ஆங்கிலத்தில் KYC என அறியப்படும் கோப்பில் தாங்கள் ஏற்கனவே அளித்துள்ள விவரங்களை சரிபார்த்தல் அல்லது புதிய விவரங்களை சேர்த்தல், குறிப்பாக:

- ஏற்கனவே அளிக்கப்பட்ட வங்கிக் கணக்கு ஆணைகளை திருத்துதல் (Bank mandates):
- நியமனதாரர் பதிவு
- மின்னஞ்சல், மொபைல் எண் மற்றும் முகவரி குறித்த விவரங்களை திருத்துதல்.

இந்த பிரச்சாரமானது பங்குதாரர்கள் தங்களுக்கு உரிமையுள்ள ஈவுத்தொகை மற்றும் பங்குகள் IEPFA-க்கு மாற்றப்படுவதைத் தடுக்க வேண்டியும் மற்றும் எந்தவொரு நிதியாண்டிற்கும் செலுத்தப்படாத / கோரப்படாத ஈவுத்தொகையைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

பங்குதாரர் நடவடிக்கைக்காக:

தங்கள் ஈவுத்தொகையை கோராத அல்லது முழுமையற்ற KYC பதிவுகளைக் கொண்ட பங்குதாரர்கள், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரை (RTA) விரைவில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட், 'சூர்யா '35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம் சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் - 641028, தமிழ்நாடு, இந்தியா. தொலைபேசி : +91 422 2314792, 2539835/836, 4958995. **https://web.in.mpms.mufg.com/helpdesk/Service_Request.html**

கூடுதலாக, பங்குதாரர்கள் தங்கள் கோரிக்கைகளை **SWAYAM** இணையதளம் மூலம் பதிவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள் : **https://swayam.in.mpms.mufg.com**

முக்கிய அறிவிப்பு:

பொருந்தக்கூடிய விதிகளின்படி, தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளுக்கு ஈவுத்தொகை கோரப்படாமல் இருந்தால், அத்தகைய ஈவுத்தொகை மற்றும் தொடர்புடைய அடிப்படை பங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPFA) மாற்றப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

நிறுவன பங்குதாரர்கள் தங்கள் உரிமையைப் பாதுகாத்து கொள்ளவும், இதுகுறித்து நிலவும் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க இந்த பிரச்சார காலத்தினுள் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
பி.வி. சந்திரன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00628479

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 14.08.2025

கனரா வங்கி Canara Bank

சிண்டிகேட் Syndicate

பிராந்திய அலுவலகம்-1 - கோயமுத்தூர் :
எண்.166, டி.வி.கோவாமி ரோடு மேற்கு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர் – 641 002.
போன் : 0422-2558467, 466, மின்னஞ்சல் : legalrocbr@canarabank.com

தங்க நகை ஏல அறிவிப்பு

எங்களது வங்கி கிளைகளில் நகை கடன் பெற்று மீட்கப்படாமல் (அ) மற்றும் கடன்கள் பெற்று நிலுவையில் உள்ள கீழ்கண்ட நபர்களுக்கு பதிவு தபால் மூலம் அறிவுறுத்திய பின்பும் நகைகளை மீட்காமல் உள்ளனர். அவர்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துவது என்னவென்றால், மீட்கப்படாமல் உள்ள நகைகளை வருகின்ற **30.08.2025 –ம் தேதி மாலை 4.00 மணி வரை** மட்டும் பணத்தினை செலுத்தி நகைக்கடன் மற்றும் பிற கடன்களை நேர் செய்து மீட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறினால் வருகின்ற **02.09.2025, செவ்வாய்கிழமை மதியம் 1.00 மணி முதல் மதியம் 4.00 மணி வரை** அந்தந்த வங்கி கிளை அலுவலகத்தில் மின் ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு கீழ்கண்ட கடன் பெற்றவர்களின் யாராவது இறந்திருந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும், வெளிநாடு சென்றவர்களுக்கும், வங்கி நோட்டீஸ் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் பொருந்தும், ஏலத்தில் பெற்ற தொகையில் மேற்படி நகை கடனுக்கு உரிய தொகை போக மீதி இருந்தால் அக்கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிற கடன்களுக்கோ, ஜாமின்தாரராக உள்ள கடன்களுக்கோ வரவு வைக்கப்படும். ஏலத்தில் பெற்ற தொகை கடன் தொகையைவிட குறைவாக இருந்தால் மீதித் தொகை சட்ட நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப்போடவோ, நிறுத்தி வைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு என்பதை அறியவும்.

கோயமுத்தூர் கணபதி கிளை (02987) : 9489043518
(Account No : 209272434, IFSC Code : CNRB0002987)
சர்வே எண்.92, கதவு எண்.1C/1, சத்தி ரோடு, ராமகிருஷ்ணாபுரம், கணபதி, கோயமுத்தூர்-641006

வ எண்	கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	கடன் கணக்கு எண்.	அனுமதி அளிக்கப்பட்ட தேதி
1.	**முத்துவீரன். V P,** த/பெ.பழனிசாமி. V, எண்.166 G8, நியூ முல்லி நகர், 2வது வீதி, கணபதி, கோயமுத்தூர்-641 006.	2987836008355	19.07.2021
	கோயமுத்தூர் ஹெட் குவார்டர்ஸ் கிளை (01204) : 9489043422 (Account No : 209272434, IFSC Code : CNRB0001204) P.O.எண்.3839, 5/4, முதல் தளம், RVR பில்டிங், ஹெட் குவார்டர்ஸ் ரோடு, கோயமுத்தூர்-641 018.		
2.	**பிரதாப். R,** 10/135, காளியாபுரம், திருமலையாம்பாளையம், கோயமுத்தூர் – 641 105,	180183905020	29.05.2023
		180188887923	12.06.2023
		180203364473	24.07.2023
		180203388001	24.07.2023
		180214939240	30.08.2023
	கோயமுத்தூர் ஒப்பணக்கார வீதி கிளை (01205) : 9489043424 (Account No : 209272434, IFSC Code : CNRB0001205) தபால் பெட்டி எண்.19, 17/87, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 641 001.		
1.	**ஜாஃபர் சாதிக். M,** த/பெ.திரு.முஸ்தஃபா, எண்.39/66, இலாஹி நகர், கரும்புக்கடை, குனியமுத்தூர், கோயமுத்தூர் – 641 008	61208390001238	16.10.2020
	கோயமுத்தூர் செல்வபுரம் கிளை (06237) : 9489043919 (Account No : 209272434, IFSC Code : CNRB0006237) சர்வே எண்.232/A, தெலுங்குபாளையம் பிரிவு, செல்வபுரம், கோயமுத்தூர் தெற்கு-641026		
1.	**மகேஷ். S,** எண்.15, புதுக்காலனி லைன், தெலுங்குபாளையம், கோயமுத்தூர் – 641039	180157205163	01.03.2023
2.	**வெங்கட்சூர்யா** எண்.28/1, வெங்கடாசலபதி நகர் சுவுண்டம்பாளையம், கோயமுத்தூர் – 641 020	180268779167	03.02.2024
3.	**தனலட்சுமி. M,** எண்.34, மீனாட்சி நகர், தெலுங்குபாளையம் பிரிவு, கோயமுத்தூர் – 641 039	164019027371	19.06.2024
		164060838729	14.03.2025

கோவங்கலம் கிளை (0133) : 919629958448
(Account No : 209272434, IFSC Code : CNRB0001335)
எண்.4/3, காவல் நிலையம் ரோடு, கோவங்கலம், பொள்ளாச்சி, கோயமுத்தூர் -642 107

1.	**முரளி நாகராஜன்** த/பெநாகராஜன், எண்.3/152, கோவங்கலம் புதூர், பொள்ளாச்சி – 642 107	180287089415	22.03.2024
2.	**K ராமசாமி,** த/பெ.காளியப்பன், எண்.2/109, சிஞ்சுவாடி தோட்டம், லட்சுமிபுரம் அஞ்சல், கோயமுத்தூர்–642 107	180375591134	07.01.2025

கிணத்துக்கடவு கிளை (04381) : 919095544492
(Account No : 209272434, IFSC Code : CNRB0004381)
எண்.119/A, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கிணத்துக்கடவு தாலுகா, கிணத்துக்கடவு, கோயமுத்தூர் - 642 109

1.	**குணசேகரன்,** எண்.4/225, சின்னக்குயில், கள்ளப்பாளையம், கோயமுத்தூர் – 641 201	180277854532	28.02.2024

கோளார்பட்டி கிளை (16148) : 919562674137
(Account No : 209272434, IFSC Code : CNRB0016148)
கதவு எண்.1/171, பொள்ளாச்சி-உடுமலைபேட்டை மெயின் ரோடு, கோளார்பட்டி, பொள்ளாச்சி-642 107

1.	**மோகன்ராஜ். N,** த/பெநடராஜ், எண்.3/42, கோவங்கலம் புதூர், பொள்ளாச்சி – 642 107	180001361261	22.02.2021
2.	**முருகேசன். K,** C/o கெங்கையா, 13/3, அன்னை இந்திரா வீதி, சூலேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி, கோயமுத்தூர்–642006	180207672770	07.08.2023
		180236352808	07.11.2023

மதுக்கரை கிளை (01232) : மொபைல் எண் : 919573034200 :
(Account No : 209272434, IFSC Code : CNRB0001232)
எண்.17/258A, பாலக்காடு மெயின் ரோடு, காந்தி நகர், மதுக்கரை, கோயமுத்தூர் – 641 105

1.	**ஆரோக்கிய அசோக்குமார். A,** த/பெ.அல்போன்ஸ். P, 502B, சர்ச் காலனி மதுக்கரை, கோயமுத்தூர் – 641 105	180275856499	21.02.2024

சோமந்துறை கிளை (01619) : 917402169799
(Account No : 209272434, IFSC Code : CNRB0001619)
சர்வே எண்.65/A-2, மெயின் ரோடு, சோமந்துறை, பொள்ளாச்சி – 642 134,

1.	**சின்னத்தாய்,** க/பெ.ஆறுமுக கவுண்டர், எண்.2/58, பஜனை கோவில் வீதி, சோமந்துறை, பொள்ளாச்சி – 642 134,	180211562444	19.08.2023

சுந்தராபுரம் கிளை (03556) : 918907508334
(Account No : 209272434, IFSC Code : CNRB0003556)
சர்வே எண்.160/3, மனை எண்.13, ரெங்கநாதன் கார்டன்ஸ், ரெட்டியார் காலனி, பொள்ளாச்சி மெயின் ரோடு, சுந்தராபுரம்-641 024

1.	**முத்துமாரி. S** 34C, MGR நகர் சிட்கோ அஞ்சல், கோயமுத்தூர்-641 021	3556836005742	17.11.2020
		3556836005743	17.11.2020

வெற்றிபெற்ற ஏலதாரர் ஏலத்தொகையை (முன்வைப்புத்தொகை உட்பட) ஏலம் உறுதி செய்யப்பட்ட நாளுக்கு அடுத்த வேலைநாளில் முழுத்தொகையையும் செலுத்தவேண்டும்.

முன்வைப்புத் தொகை செலுத்தவேண்டிய கடைசித் தேதி மற்றும் நேரம் : 28.08.2025 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி.

மேற்படி ஒவ்வொரு கிளைக்கும் செலுத்தவேண்டிய முன்வைப்புத் தொகை : ரூ.25,000/-

மின்னணு ஏலத்திற்கான சேவை வழங்குநர்
M/s. e-Procurement Technologies Limited -
Auction Tiger, Web : canarabank.auctiontiger.net

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி, பிராந்திய அலுவலகம்-1,
கோயமுத்தூர்

இடம் : கோயமுத்தூர்
தேதி : 16.08.2025